சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **94 / 2024**

பெயர்: ராமசாமி வா.சா. 1 தேதி **09.02.2026**

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் என்ன தொழில் செய்துவருகிறேன் என்றால் 2014ம் ஆண்டில் இருந்து ஓட்டுநராக வேலை செய்துவருகிறேன். எனக்கு மாத சம்பளமா, நாள் சம்பளமா என்றால் நாள் சம்பளம். எனக்கு ஒரு நாளைக்கு சம்பளம் எவ்வளவு என்றால் ஒரு மாதத்திற்கு 40,000/- கிடைக்கும். என்னுடன் எனது அம்மா, எனது மனைவி மற்றும் குழந்தை ஆகியோர்கள் உள்ளார்கள். எனது குழந்தை தனியார் பள்ளியில் எல்.கே.ஜி படித்து வருகிறது. என்னுடைய மாத வருமானம் ரூ.40,000/- என்பதற்காக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வெளி மாநிலங்களுக்கும் ஓட்டுநராக செல்வேன் என்றால் தமிழ்நாட்டிற்கு மட்டும் தான் செல்வேன். பிரதிவாதி எங்கு என்ன வேலை பார்க்கிறார் என்கின்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர் அரசு போக்குவரத்து கழகத்தில் பணிபுரிந்து வருகிறார். எனக்கு பிரதிவாதியை எப்படி தெரியும் என்றால் எனது தகப்பனார் மூலம் தெரியும்.

2. நான் வீட்டில் இருக்கும் சமயத்தில் பிரதிவாதியிடம் எனக்கு பழக்கம் உண்டு. பிரதிவாதி எந்த தேதியில் என்னிடம் பணம் கேட்டார் என்கின்ற சங்கதியையும் நான் அதை எவ்வாறு தயார் செய்தேன் என்கின்ற சங்கதியையும் எனது பிராதிலோ, முதல் விசாரணையிலோ தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். அவ்வாறே 06.08.2023ம் தேதி நான் பிரதிவாதியிடம் மேற்படி 9,00,000/-த்தை காசோலையாக கொடுத்தேனா அல்லது பணமாக கொடுத்தேனா என்கின்ற சங்கதியை எனது பிராதிலோ, முதல் விசாரணையிலோ குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால் பணமாக கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.3 ஆவணத்தில் ரூ.100க்கு 2 சதவீதம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராது மற்றும் முதல் விசாரணையில் ரூ.100க்கு ரூ.1 வட்டிவீதம் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா-ஆ.3 அறிவிப்பிற்கு எனக்கு பதில் அறிவிப்பு வந்ததா என்றால் வந்தது தேதி ஞாபகம் இல்லை. பிரதிவாதி எனக்கு அனுப்பியதாக கூறக்கூடிய அறிவிப்பினை எனது தரப்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதற்கு தனிப்பட்ட காரணம் எதுவும் உண்டா என்றால் இல்லை.

3. எனது வழக்கறிஞருக்கும், பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பினார் என்கின்ற சங்கதியை எனது வழக்கறிஞர் என்னிடம் தெரிவித்தாரா என்றால் இல்லை. எனக்கு வந்ததாக கூறக்கூடிய பதில் அறிவிப்பை எனது வழக்கறிஞரிடம் காண்பித்தேனா என்றால் இல்லை. பதில் அறிவிப்பில் உள்ள சங்கதி உண்மை என்பதால் தான் அந்த பதில் அறிவிப்பை இவ்வழக்கில் திட்டமிட்டு மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் பணம் பெற்றுக்கொண்ட அன்றே புரோ நோட்டு எழுதிக்கொடுத்தாரா அல்லது பின்னிட்டு எழுதிக்கொடுத்தாரா என்றால் பணம் பெற்றுக்கொண்டதாக கூறக்கூடிய அன்றே புரோ நோட்டு எழுதிக்கொடுத்தார். புரோ நோட்டை யார் எழுதினார் என்றால் பிரதிவாதி அழைத்து வந்த நபர் தான் மேற்படி புரோ நோட்டை எழுதினார். மேற்படி புரோ நோட்டை பிரதிவாதி என்முன்பாக எழுதினாரா அல்லது பிரதிவாதி ஏற்கனவே எழுதி கொண்டுவந்தாரா என்றால் தட்டச்சு செய்யப்பட்டிருந்தது, மீதமுள்ள பகுதியை என்முன்பாக பிரதிவாதி அழைத்து வந்த நபர் பூர்த்தி செய்தார்.

4. நான் கடன் கொடுத்தாக சொல்லக்கூடிய அன்று பிரதிவாதியுடன் எத்தனை நபர்கள் வந்தார்கள் என்றால் பிரதிவாதியை சேர்த்து மூன்று நபர்கள். அவர்கள் யார் என்கின்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதில் வந்த ஒரு நபரை மட்டும் எனக்கு தெரியும். அவரின் முகவரி மற்றும் பெயர் என்வென்றால் தேவராசு, மேலபுதுப்பட்டியை சேர்ந்தவர். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையில் பிரதிவாதியிடம் நேரடியாகவோ அல்லது செல்போன் மூலமாகவோ எத்தனை முறை கேட்டேன் என்று கூறவில்லை என்றால் சரிதான். K.V. சுரேஷ் என்கின்ற நபரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிக்கு நான் அறிவிப்பு அனுப்பியதற்கு பின்னிட்டு பிரதிவாதி என்மீதும், K.V. சுரேஷ், கனகசபை என்பவர்கள் மீதும் தோகைமலை காவல் நிலையத்தில் மேற்படி பிரதிவாதி புகார் கொடுத்து எங்களை விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்தற்கு பின்னிட்டு முதல் விசாரணை வாக்குமூலம் தயார் செய்தபோதும் கூட பதில் அறிவிப்பு பற்றி எனது வழக்கறிஞரிடம் தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன்.

5. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் எனக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்தாக சொல்லக்கூடிய புரோ நோட்டில் கண்டுள்ள வட்டியில் ரூ.100க்கு ரூ.1 என்றும், அறிவிப்பில் ரூ.100க்கு ரூ.2 என்று முரண்பட்டு கூறியுள்ள நிலையில் நான் எதன் அடிப்படையில் மேற்படி வட்டி விகிதத்தை கணக்கீட்டுள்ளேன் என்று சொன்னால் புரோ நோட்டில் கண்டுள்ள வட்டி தொகையினை கணக்கீட்டுள்ளேன். வா.சா.ஆ.3 அறிவிப்பிற்கு பின்னிட்டு வழக்கு தாக்கல் செய்யும் வரையிலான காலகட்டத்தில் நான் பிரதிவாதியிடம் மேற்படி கடன் தொகை பற்றி கேட்டேனா என்றால் கேட்கவில்லை. பிரதிவாதி என்னிடம் நான் சொன்ன தேதியில் கடன் வாங்கவும் இல்லை அதற்கு முன்பாக

கேட்கவும் இல்லை என்றால் சரியல்ல. நானும், K.V. சுரேஷ் என்பவரும் உறவினர் என்றாலும், பிரதிவாதி K.V. சுரேஷ் என்பவரிடம் 2019ம் ஆண்டு பெற்ற கடனுக்கு ஆதரவாக கொடுத்த கடனுறுதி சீட்டை காலம் கடந்துவிட்டதால் இந்த வழக்கில் நான் எனது பெயரில் பொய்யாக மோசடியாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கிக்கொண்டு என்னை மனஉளைச்சலுக்கு ஆளாக்கியாதாக கூறுவது உண்மையில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி எனக்கு எவ்வித தொகையும் செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றாலும், நானும் K.V. சுரேஷ் என்பவரும் சேர்ந்து மோசடியாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் உண்மையிலேயே கடன் வாங்கவில்லை என்பதால் தான் வட்டி விகிதத்தை முன்னுக்கு பின் முரணாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கும், எனக்கும் எவ்வித வரவு, செலவும் இல்லை என்றாலும் K.V. சுரேஷ் என்பவரின் தூண்டுதலின் பேரில் பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல. நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிராமிசரி நோட்டில் உள்ள சாட்சியை நான் விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன்.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.02.09 15:07:08 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.